**குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு

செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

**1.6 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ முடிவுகள் ஆகியவற்றுடன் இணங்காமை**

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனம் | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 2015 இலக்கம் 4 கொண்ட குற்றச் செயல்களுக்கு பலியாக்கப் பட்டோரின் மற்றும் சாட்சியங்களை பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை சட்ட மூலத்தின் 13(1)(ஊ) பிரிவு | குற்றச் செயல்களுக்கு பலியாக்கப்பட்டோரின் சட்ட மூலத்தின் 29 பிரிவின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நிதியத்திலிருந்து இழப்பீடு பெற்றுக் கொடுக்கும் பொருட்டு முறைமை ஒன்றினை பிரசுரிக்கப்பட்டு அதனை ஏற்றுக் கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையினை நிறுவப்பட்டு 06 வருடங்கள் சென்றிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை | பாதுகாப்பு நிதியத்திலிருந்து இழப்பீடு பெற்றுக் கொடுப்பதற்கான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2015 இலக்கம் 04 கொண்ட குற்றச் செயல்களுக்கு பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சியங்களுக்கு துணை புரிவதோடு பாதுகாப்பளிக்கப்படும் சட்ட மூலத்தின் மூலமாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு அறிமுகம் செய்யப்படவிருக்கும் புது சட்டவாக்கத்தில் இந்நிதியத்திலிருந்து இழப்பீடளிப்பதற்கு தேவையான ஆலோசனை சேர்க்கப்பட்டிருப்பதாக பெரும்பாலானோரிக் கருத்தாக இருந்தது. எவ்வாறாயினும் மேற்கொண்டு இது பற்றி கலந்துரையாடப்பட்டு தீர்மானம் மேற்கொள்ள இருப்பதுடன் தற்போது நீதிமன்ற பணிப்பினை மூலம் நிதியத்திலிருந்து | இழப்பீடு வழங்குவற்காக பிரேரணை முறைமை யொன்றினை துரிதமாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொடர்ந்து நஷ்ட ஈடு வழங்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 104 மற்றும் 105 | நட்ட இழப்பிடு அட்டவணையின் படி காணாமற் போயிருக்கும் லெப்டொப் கணனி பொறி, கணிப் பொறிப்பை, மூன்று H/Drive மற்றும் Toshiba E-Studio 2508 A நிழற்பிரதி இயந்திர இயக்கு டொன்கல் ஆகியன தொடர்பாக நிதிப்பிரமாணப் பிரகாரம் இழப்பீட்டினை அறவிடுவதற்கு அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இப்பொருட்கள் காணாமற் போனதை இட்டு நிதிப் பிரமாணம் 104, 105 இது தொடர்பாக பரீட்சிப்பினை மேற்கொள்ளப்பட்டதுடன் குழு பரிந்துரைகளின் படி தனிப்பட்ட முறையில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த மூன்று HARD DRIVE வின் நட்டத்தினை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. லெப்டொப் கணிப் பொறி, அதன் பை மற்றும் Toshiba நிழற்பிரதி இயந்திர இயக்கு Donglė ஆகியன காரியாலயப் பொதுப் பாவனையில் விடப்பட்டிருந்தமையினால் குழுப் பரிந்துரையின் படி அதனை தள்ளுபடி செய்வதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தினை குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு மீண்டும் சிரேஷ்ட அதிகாரியொருவரின் கீழ் பரீட்சிப்பினை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டதுடன் அப்பரீட்சிப்பினை துரிதமாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நி.பி 104 மற்றும் 105 பிரகாரம் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறுகள்

மீளாய்வாண்டில் நடவடிக்கை விளைவில் ரூபா 4,265,483 தொகையான பற்றாக்குறை ஏற்பட்டதுடன் அதற்கு முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,719,343 ஆக இருந்தது. அதன்படி நிதிவிளைவில் ரூபா 1,546,140 பற்றாக்குறை காணப்பட்டது. இப்பற்றாக்குறைக்கு சென்ற ஆண்டிற்கு நேரொத்த மீளாய்வாண்டில் தனிநர் சம்பளங்கள், பராமரிப்பு செலவுகள், விநியோக மற்றும் பாவனைச் செலவினங்களின் ஏற்றம் பிரதான காரணிகளாக இருந்தது. இப்பின்னடைவுக்கு அரச மீண்டெழும் கொடைகள் குறைந்தமை முக்கிய காரணியாக உள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 மே 31 ஆந் திகதிய இலக்கம் MOJ/E/17/T/36 கொண்ட நீதி அமைச்சின் சுற்றுநிருபத்தின் படி வாகன திருத்த வேலைகள் தொடர்பாக விலை மனுக்களுக்காக இயந்திர பொறியியலாளர் பரிந்துரையினை பெற்றுக் கொள்ள வேண்டுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டு 4 சந்தர்ப்பங்களில் மொத்த தொகை ரூபா 329,380 ஆன வாகன திருத்த வேலைகளுக்காக இயந்திர பொறியியலாளரின் பரிந்துரையினை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த வருடம் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக இயந்திர பொறியியலாளர் ஒருவரினை பங்கு கொள்ள வைப்பதில் இருந்த இயலாமையினால் இவ்வாகனங்களின் அவசர திருத்த வேலைகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மூலமாக பெறுகை செயற்பாடுகள் பின்பற்றப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இதனகத்துக்குப் பிறகு முக்கிய திருத்த வேலைகள் அறிக்கையில் உள்ளவாறு இயந்திர பொறியியலாளர் ஒருவரின் சேவையினை பெற்றுக் கொள்ளப்பட்டு மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் 360 முறைப்பாடுகள், விசாரணை மேற்கொள்வதற்கு மீதியாக இருந்ததுடன், மீளாய்வாண்டினுள் கிடைக்கப் பெற்ற 160 முறைப்பாடுகள் உள்ளிட்ட 520 முறைப்பாடுகளினை விசாரணை செய்யப்பட்டு அவற்றுள் 118 முறைப்பாடுகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | அதிகாரசபைக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளின் சுபாவம் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. முறைப்பாடொன்று துரிதமாக முடிவது என்பது வினைத்திறனினை அளக்கும் தீர்மான காரணியாவதில்லை. ஏனெனில் சில முறைப்பாடுகளுக்கு பாதுகாப்பினை வழங்கப்படுவது வழக்கினை விசாரித்து முடியும் வரையில் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டியிருக்கும் வீடியோ தொழில்நுட்பத்தினை ஊடாக சாட்சியங்கள் பெற்றுக் கொள்வதற்கு நீண்டநாட்கள் செல்லக்கூடும். இன்னும் சில முறைப்பாடுகள் ஆரம்ப விசாரணை முடிக்கப்பட்ட பிறகும் கூட அது தொடர்பாக மூல சபையினை நியமிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும். | அதிகார சபையின் செயலாற்றலினை மேம்படுத்து வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டோரினதும் மற்றும் சாட்சியங்களை பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் சட்ட மூலத்தின் 29 ஆவது பிரிவின் படி தாபிக்கப்பட்ட பாதுகாப்பு நிதியத்திற்கு மீளாய்வாண்டிலும் சென்ற ஆண்டின் உள்ளும் சேகரிக்கப்பட்ட தண்டப்பணம் முறையே ரூபா 1,252,648 மற்றும் ரூபா 6,681,270 ஆக இருந்ததுடன் சட்டமூலத்தின் 29(4) பிரிவின் பிரகாரம் | பாதுகாப்பு நிதியத்தினைக்கு நீதிமன்றங்கள் மூலமாக அநேகமான தண்டப்பணம் போன்று பணம் கிடைக்கப் பெறுகின்றது. இந்நிதியத்திலிருந்து தற்போது நஷ்டஈட்டினை பெற்றுக் கொடுக்கப்படுவது நீதிமன்றங்களின் பணிப்பின் பேரில் மாத்திரமாகையினால் அதன்படி 2021 வருடம் இப்பணிப்புக்களில் | சட்டமூலத்தின் படி இழப்பீடு வழங்குவதற்கான முன்மொழிதல் முறைமையினை துரிதமாக செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சியங்களை பாதுகாப்பதற்கான செலவினமாக முறையே ரூபா 6.431 இரண்டு நபர்களுக்கும் மற்றும் ரூபா 17,943 நான்கு நபர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன. பாதுகாப்பு நிதியத்தின் முக்கிய செலவினமாக அச்சட்ட மூலத்தின் 29(4) பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் நஷ்டஈட்டினை கருதப்படுவதனாலும் சட்டமூலத்தின் 2(இ) பிரிவின் படி குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டவர்களுக்கு எதிராக குற்றமொன்றினை மேற்கொள்ளப்பட்டமையினால் குற்றவாளிக்கப்பட்ட நபர்களிடமிருந்து பலியாக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டு பணத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு வழிவகுப்பது அதிகாரசபையின் நோக்கிணையாக உள்ளபடியாலும் மேற்படி வருமானத்தினை சேகரிப்பது மற்றும் நஷ்டாடு வழங்குவது குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தமையினால் வருமானம் சேகரிக்கும் மற்றும் நஷ்டஈடு வழங்கும் முறைமையினை ஒழுங்காக நிறைவேறுமா என்பதனை பிரச்சினைக்குரியதாக இருந்தது. | பின்னடைவு ஏற்பட்டுள்ளமை உண்மையாகும். ஆகையினால் இந்நட்டஈடு வழங்குவதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எவ்வாறாவது தற்போது இந்நிதியத்திலிருந்து நட்டஈடு வழங்குவதற்காக வழிகாட்டலினை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் தீர்மானத்தை அடுத்து பணிப்புக்களினை வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |

### 3.3 வீண்விரயம் அல்லது குறைபாவனைக்குள்ளான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி (UNDP) திட்டத்தின் கீழ் 2018 வருடம் அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 370,165 பெறுமதிவாய்ந்த நிழற்பிரதி இயந்திரத்தினை மீளாய்வாண்டு இறுதியாகியும் கூட பாவனை | ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2018 வருடம் கிடைக்கப் பெற்றிருந்த நிழற்பிரதி இயந்திரத்தினை அப்போதைய பாதுகாப்பு | தேவையினை சரியான இனங்காணப்பட்டு அதன்படி கோரப்பட்டு சொத்தினை பெற்றுக் |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் இதுவரை அதன் திரண்ட பொறுமானத்தேய்வாக ரூபா 128,594 அதிகாரசபையின் திரண்ட இலாபத்திலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த நிழற்பிரதி இயந்திரத்தினை இயக்க உதவும் டொன்கலினை காணாமலாகி உள்ளது. | பிரிவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அப்பிரிவினை ஒழுங்காக தாபிக்கப்பட்டிருக்காமையினால் அதனை களஞ்சியசாலையில் வைக்கப்பட்டது. ஆயினும்,இதன் டொன்கல் காணாமற் போய் இருந்தமையினால் இயந்திரத்தினை இயக்கச் செய்ய முடியாது போய் இருந்தது. தற்போது இவ்இயந்திரத்தை பாதுகாப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு நிழற்பிரதி பெற்றுக்கொள்ளும் வேலை நடைபெற்று வருகின்றது. அதோடு இக்காணாமற் போனமை தொடர்பாக நி.பி 104, 105 கீழ் முறையான பரீட்சிப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 திட்டங்கள் அல்லது மூலதன வேலை தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 17 ஆந் திகதியில் அழைப்பிடு மத்திய நிலையமொன்றினை தாபிப்பதற்கான குழுக் கூட்டமொன்றினை நடாத்தப்பட்டிருந்ததுடன் அதில் அழைப்பிடு மத்திய நிலையமொன்றினை தாபிக்கும் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அதற்குத் தேவைப்படும் மென்பொருட்கள் மற்றும் வன்பொருட்களுக்கான நிதி அனுசரணையினை UNDP நிறுவனத்திடமிருந்து பெற்றுக் | 2019 நவம்பர் மாதம் Call Center வசதிகளினை தாபிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதற்கான அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கு அதிகார சபையினால் முகாமைத்துவ சபையினை நியமிக்கப்படாதிருந்தமை யினால் அதனை தாபிக்க முடியாது போயிற்று. 1985 உடன் தொலைபேசி சேவைக்காக | தொழிற்படு திட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் காரியங்கள் செயற்படுத்தப்பட்டு பொது மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் சேவைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சபையின் அனுமதியினை அதற்கு பெற்றுக் கொடுப்பதற்கு தாமதமானதன் காரணமாக அக்காரியம் நடவாது போயிற்று. தற்போது அதிகாரசபை வருடாந்தம் ரூபா 540,000 சந்தா தொகையினை செலுத்தப்பட்டு 1985 கொண்ட உடன் தொலைபேசி சேவையினை மாத்திரம் தொழிற்படுத்தப்பட்டு பேணிச் செல்வதுடன் அதற்கென அறிமுகப்படுத்தவிருந்த முறைமையினை இதுவரையும் செயற்படாதிருந்ததுடன் தற்போது கிடைக்கப் பெறும் தொலைபேசி அழைப்புக்களுக்காக சுருக்கமான அட்டவணையினை பேணப்பட்டுக் கொண்டு இதுவரையும் 08 முறைப்பாடுகள் தொடர்பில் மாத்திரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவிற்கு அலைவு எண் ஒதுக்கலுக்காக வருடாந்தம் ரூபா 540,000 சந்தா தொகையினை வழங்கப்படுவதுடன் இச்சேவையின் கீழ் நாட்டில் பல பிரதேசங்களிலிருந்தும் திடீர் முறைப்பாடுகள் 2019 வருடம் 1330, 2020 வருடம் 814 என கிடைக்கப் பெற்றிருந்தன. அதிகார சபையின் விடயப் பரப்புடனான விடயங்கள் தொடர்பாக குறித்துக் கொள்ளப்பட்டு முன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2019 வருடம் செய்து முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த துணை மற்றும் பாதுகாப்பு பிரிவுகளை அமைப்பது மற்றும் பேணிச் செல்வது தொடர்பான வழிகாட்டலினை அபிவிருத்தி செய்தல் மற்றும் துணை மற்றும் பாதுகாப்பினை பெற்றுக் கொடுக்கும் செயல் திட்டத்திற்காக தரப்படுத்தப்பட்ட புரோட்டோ கோல் ஒன்றினை தயாரிப்பதற்கு அதிகார

அதிகாரசபையின் ஒழுங்கமைப்பின் கீழ் பணிப்பாளர் (பாதுகாப்பு) (துணைச் சேவைகள்) மற்றும் (சட்டம் மற்றும் சட்டத்தினை வலுப்படுத்தல்) ஆகிய அடிப்படை தொழில்நுட்ப பணிகள் 03 பிரிவுகளில் மூன்று பணிப்பாளர்களின் கீழ் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டு அதற்கான பணிக் குழாமினையும் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டுள்ளது. தற்போது சட்டப்பிரிவுக்காக பணிப்பாளர் ஒருவர் பதில் கடமையாற்றுவதுடன் புது

முன்னுரிமைப் படி பணிகள் திட்டமிடப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| சபைக்கு உதவி பெற்றுக் கொடுப்பதனை மீளாய்வாண்டு இறுதியாகியும் நிறைவெற்றப்படாதிருந்ததுடன் அதிகார சபையின் குறிக்கோள்களினை அடைந்து கொள்வதில் மிக அவசியப்படும் துணை மற்றும் பாதுகாப்பு பிரிவுக்கு தேவையான பணிக் குழாமினைக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கையினையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஆட்சேர்ப்பினைக்கு அரசாங்கம் அங்கீகாரம் பெற்றுத் தராதபடியால் பாதுகாப்புப் பிரிவு உதவி பணிப்பாளர் (சட்டம்) கீழ் பேணப்பட்டு வருகின்றது. |

### 3.5 வேறு இயக்கங்களின் வளங்களை பாவனை செய்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் நோக்கினை அடைந்து கொள்வதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய அத்தியாவசியமான வேலைகள் மற்றும் காரியங்களுக்குமான சர்வதேச தரங்களுக்கு அமைய குற்றச்செயல்களுக:கு பலியாக்கப்பட்டோருக்கும் மற்றும் சாட்சியங்களுக:கும் இழப்பீடு வழங்குவதற்காக மேலும் விருத்தி செய்யப்பட்ட வழிகாட்டல்களை மேம்படுத்துவது மற்றும் வேறுவித நிவாரணங்கள் பெற்றுக் கொடுத்தல் பலியாக்கப்பட்டவர்களின் உரிமைகள் தொடர்பில் நீதிமன்றங்களில் வாதிடக்கூடிய வழக்கறிஞர் குழுவொன்றினை அமைத்தல் மற்றும் Victimology, Criminology மற்றும் Recidivism ஆகிய விடயங்கள் தொடர்பாக பரீட்சிப்பு மத்திய நிலையம் ஒன்றினை அமைப்பதன் பொருட்டு மீளாய்வாண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் நிதியிடப்பட்டு அமுல் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்நிறுவனத்துடன் சம்பந்தப்பட்டு ஒப்பந்தத்தினை கைச்சாத்திடப்பட்டு செயற்திட்டத்தினை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் இழப்பீடு வழங்குவதற்குமாக வழிகாட்டலினை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் முகாமைத்துவ சபையின் அனுமதியுடன் முன்கொண்டு நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. Victimology, Criminology மற்றும் Recidivism ஆகிய விடயங்கள் சம்பந்தப்பட்ட பரீட்சிப்பு மத்திய நிலையத்தினை தாபிப்பதற்கு தனியான மூலதன செலவினத்தை மேற்கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தில் இயலத காரியமாக உள்ளதால் இவ்விடயம் சார்புள்ள புத்தகங்களை கொள்வனவு செய்து தகவல் மற்றும் பரீட்சிப்பு அலகொன்றினை ஆரம்பிக்கப்பட்டது. இதனகத்திற்கு பின்னர் ஐக்கிய நாடுகள் | முன்னுரிமைப் படி பணிகள் திட்டமிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அபிவிருத்தி செயற்திட்டத்துடன் கலந்துரையாடப்பட்டு இதற்கான ஒதுக்கீட்டினை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பலியாக்கப்பட்டோரினது உரிமைகள் சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணிகளை அறிவுறுத்தப்பட்டு அவர்களின் ஒத்தாசையினை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொதுப் பிரிவினுள் மனித வளத்தினை அபிவிருத்தி செய்தல் எனும் தலைப்பின் கீழான 2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் இணைப்பு 01 படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தில் கடமையில் ஈடுபடும் முழுப் பணிக் குழாமினைக்காகவும் வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தத்தினை கைச்சாத்திடப்பட்டில்லாது இருந்ததுடன் இணைப்பு 02 படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் மனித வள அபிவிருத்தி திட்டத்தினை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. சுற்றுநிருபத்தின் 6.1 பந்தியின் படி பணிக்குழாமில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வருடத்தில் 12 மணித்தியால குறைந்தபட்ச பயிற்சி பெறும் வாய்ப்பினை அத்தாட்சிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றுநிருபத்தின் படி செயற்பட வேண்டும். மிக அவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அதிகாரசபையில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 56 இருப்பினும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எண்ணிக்கை 36 ஆகும். நிலையத்தில் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் நேரடி தாக்கத்தினை உண்டுபண்ணும் 14 பதவிகள் 2018 வருடம் முதற்கொண்டு காலியாக இருந்தன. | வெற்றிமாகவுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு 2020.12.06 திகதியன்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்ட போதிலும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக ஆட்சேர்ப்பு நடவடிக்கை தாமதப்படுத்தப்பட்டதுடன் 2021.08.28 ஆந் திகதி வெளியான நிதி அமைச்சின் சுற்றுநிருபத்தின்படி ஆட்சேர்ப்பினை நிறுத்தி வைக்கப்பட்டது. | மிக அவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (இ) | அவ்வெற்றிடங்களுள் 10 பாதுகாப்பு உத்தியோகத்தர் களுக்கான பதவிகளும் சட்ட அதிகாரி மற்றும் விசாரணை அதிகாரி பதவிகள் தலா ஒன்று வீதமும் காலியாக இருந்தன. | ஏற்கனவே குறிப்பிடப்பட்ட முக்கிய காரணத்தினால் வெற்றிடங்கள் நிரப்பப்படாது இருந்ததுடன் சட்ட அதிகாரியாக ஆட்சேர்ப்பினை செய்யப்பட்டிருந்த அதிகாரி வேறு நிறுவனமொன்றில் பதவி கிடைக்கப் பெற்று 2021.12.31 திகதியன்று சேவையிலிருந்து போனமையினால் மீண்டும் அப்பதவி காலியாகியது. | மிக அவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஈ) | உதவி முகாமைத்துவ சேவையில் 04 வெற்றிடங்கள் நிலவியதால் நிதிப் பிரிவிற்கு ஒரு உதவி முகாமைத்தவர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தார். நிதிப் பிரிவின் சகல கடமைகளையும் அவர் செய்து கொண்டு போவதுடன் கடமைகளினை பகிர்ந்தளிக்காமையினால் அதிகார சபையின் நிதிசார் அலுவல்கள் தொடர்புடைய உள்ளக ஆளுகையினை சீரான மட்டத்தில் இருக்கவில்லை. | நிதிப் பிரிவில் ஒரு முகாமைத்துவ உதவியாளரை அப்போதைக்கு இணைக்கப்பட்டிருந்த போதிலும் பிரசவ லீவு முடியப்பெற்று கடமைக்கு சமூகமளித்த இன்னொரு முகாமைத்துவ உதவியாளரை அப்பிரிவிற்கு இணைக்கப்பட்டமையினால் இப்பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் உள்ளக ஆளுகையினை வழுப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) அதிகார சபைக்காக 06 பணிப்பாளர் பதவிகளுக்கான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் 03 பணிப்பாளர் பதவிகளை மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டு கொண்டிருப்பதனால் நிறைவேற்று தரத்திலான உதவிப்பணிப்பாளர் ஒரு பதவியினை மேற்பார்வை செய்வதற்கு பணிப்பாளர் பதவி வகிக்கும் இருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இதன் படி ஊழியர் முகாமைத்துவத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பதவித் தொடர் சடங்கு முறையின் பிரமிட் அமைப்பினருக்கு முரணாக காணப்பட்டது. | 2022 வருடம் தேசிய அதிகார சபையின் பணிக்குழாம் மறுசீரமைப்பதற்கான செயற்திட்டத்தின் மூலம் இதற்கான தீர்வினை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பதவித் தொடர் சடங்கு முறையினை பிரமிட் அமைப்பினைக்கு இணங்க தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.7 வாகன முறைமையின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 கொண்ட சொத்துக்களுக்கான முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் 2(i) படி அரசுக்குச் சொந்தமான வாகனங்களின் பதிவுரிமைக்கான சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையின் உத்தியோகத்திற்காக 2018 ஆகஸ்ட் 10 ஆந் திகதி நீதி அமைச்சிடமிருந்து கையேற்கப்பட்ட 08 வாகனங்களின் திவுரிமையினை அதிகாரசபை கையேற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது 05 மோட்டார் வாகனங்களின் உரிமையினை கையேற்றுக் கொள்வதற்கான ஆவணங்கள் மோட்டார் வாகன திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன் இரு ஜீப் வாகனங்களையும் நீதி அமைச்சின் மூலம் தேசிய அதிகார சபையிடம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாகனங்களின் உரிமையினை இன்னும் நிதி மற்றும் திட்டமிடல் இனவிவகார அமைச்சின் கீழ் உள்ளமையினால் அவ்வாகனங்களை தேசிய | சுற்றுநிருபத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அதிகார சபையிடம் கையேற்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய இலக்கம் 01/2014 கொண்ட பொது நிதி சுற்றுநிருபத்தின் படி செயற்பட திட்டத்திற்குள்ளாக வேண்டிய மீளாய்வாண்டில் இற்றைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அமைப்பு முறையினை அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பணிக்குழாம் பற்றிய விபரங்கள், சம்பந்தப்பட்ட வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம், பிரதான பெறுகைகளுக்கான பெறுகை திட்டம் மற்றும் வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டின் திட்டம் ஆகியன அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த செயற்படு திட்டத்தினுள் உள்ளீர்க்கப்பட்டிருக்க வில்லை. | 2021 வருடத்திற்கான செயற்படு திட்டததின் படி முன்வைக்கப்பட இயலாது போன இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையினை 2021 வருடாந்த அறிக்கையின் வரைவில் உட்படுத்தப்பட்டுள்ளது. | சுற்றுநிருபத்தின் படி செயற்படு திட்டத்தினை தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) பலியாக்கப்பட்டோர் / சாட்சிகளுக்கான தேசிய தரவு களஞ்சியம் ஒன்றினை அமைப்பதற்கு மற்றும் சாட்சிகள் / பலியாக்கப்பட்டோர் ஆகியவர்களை அடையாள அணிவகுப்பில் அடையாளங் கண்டுகொள்ள கூடியவாறு தொழில்நுட்ப முறையில் நல்லதொரு அமைப்பினை மேம்படுத்துவதற்கு | நடைமுறை பிரச்சினைகள் காரணமாக தரவு களஞ்சியத்தினை செயற்படுத்த முடியாது போய் உள்ளது. சட்டமூலத்தின் 31(1) பிரிவின் கீழ் குற்றச் செயலுக்குப் பலியாக்கப் பட்டோர் மற்றும் சாட்சியங்களின் சாட்சிகள் அல்லது வாக்குமூலங்களை பெற்றுக் கொடுப்பதனை | அலுவல்களின் முன்னுரிமை மற்றும் நிதி சேகரிப்பினை ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு செயற்படு திட்டத்தினை தயாரிக்கப்படல் வேண்டும். |

மீளாய்வண்டில் செயற்படு திட்டத்தினுள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவைகளின் மதிப்பீட்டு கிரயத்தினை அல்லது நிதி சேகரிப்பதற்கான வீச்சினை இனங்காணப்பட்டு நிறைவேற்றப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டில் செயற்படு திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த தகவல் தொழில்நுட்ப அலகொன்றினை அமைப்பதற்காக அதற்குரிய பதவிகளையும் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

சமகால செவிப்புல கட்புல சாதனம் மூலம் மேற்கொள்வது தொடர்பான தொழில்நுட்ப அலகினை சம்பந்தமாக இப்பிரேரணையினை புகுத்தப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஆட்சேர்ப்பினை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளமை யினால் பணிக்குழாமினை மறுசீரமைப்பதற்கான அனுமதியினையும் பெறப்படவில்லை.